**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 75/2024**

**PW. 1**

**Date: 23.10.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சீனிவாசன் | வயது | 44 |
| கணவர்/தந்தை பெயர் | சங்கரன் | மதம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **23th October 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜரில்லை. கற்றறிந்த வழக்கறிஞர்கள் ஆஜர்.

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

4. தற்போது என்னிடம் காட்டப்படும் வங்கி கணக்கு பட்டியல் நான் பராமரிக்கும் பம்மல் ஐ சி ஐ சி ஐ கடன் வங்கி கணக்கின் பட்டியல் தான். (**05/03/2025 தேதியிட்ட புகார்தாரரின் வங்கி கணக்கு பட்டியல் பு.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) நான் 1 ஆம் எதிரியை போன் மூலமாக தொடர்பு கொண்டு அவருக்காக நான் பெற்றுள்ள கடனுக்கு 60 மாதங்கள் தவணையாக வடியுடன் சேர்த்து ரூ.9,10,500/– வருகிறது என்றும் எனவே ஆறு மாதங்களுக்குள் அந்த கடனை தீர்த்து விடும் படி அவரிடம் கேட்டேன். அவர் ஆறு மாதங்களுக்குள் அந்த கடனை தீர்த்து விடுவதாக என்னிடம் உத்திரவாதம் அளித்தார். அவர் கொடுத்த உத்தரவாதத்தின் பெயரில் நான் அந்த கடன் தொகையை என் வங்கி கணக்கில் இருந்து அவரது ஐசிஐ சி ஐ வங்கிக்கு பரிமாற்றம்

செய்தேன்.

5. எதிரி கொடுத்த உத்தரவாதத்தின்படி அவர் முப்பது மாதங்கள் மாத தவணைத் தொகை ரூ.15,175/- கொடுத்து வந்தார். இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம் 2021 ஆம் ஆண்டு 1 ஆம் எதிரி கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பராமரித்து வந்த ஐசிஐசிஐ வங்கியின் கிரெடிட் கார்டை அவரது தொழில் தேவைக்காக கொடுத்தேன். அந்த கிரெடிட் கார்டை பயன்படுத்த வேண்டிய நிபந்தனைகள் குறித்தும் அதற்கு செலுத்த வேண்டிய வடித்தொகை குறித்தும் அவருக்கு தெரிவித்து அவர் பயன்படுத்தும் தொகையை மாத மாதம் முறையாக செலுத்தி விடும்படி அவரிடம் சொன்னேன். அவரும் அதற்கு ஒப்புக்கொண்டார். அதன்படி அவர் ஆகஸ்ட் 2021 முதல் டிசம்பர் 2021 வரை ரூ.4, 55,000/- க்கு செலவு செய்துள்ளார். ஆனால் அவர் எனக்கு மூன்று லட்சம் மட்டுமே திருப்பி கொடுத்தார். மீதம் ரூ.1,55,000/- திருப்பி கொடுக்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வங்கி கணக்கு பட்டியல் மேற்கண்ட கிரெடிட் கார்டை பயன்படுத்தி அதற்கான பரிவர்த்தனை விவரங்கள் தான். (**10/10/2021 தேதியிட்ட ஐசிஐசிஐ வங்கியின் கிரெடிட் கார்டு பு.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. மேற்கண்ட என்னுடைய கிரெடிட் கார்டை பயன்படுத்தி 1 ஆம் எதிரி பே மை சாய்ஸ் என்ற ஆன்லைன் புரோக்கர்ஸ் மூலமாக பணமாக மாற்றம் செய்துள்ளார். கடந்த

2021 ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ஆம் எதிரியின் நண்பருக்கு வாகன விபத்து ஏற்பட்டதாகவும் அவரை மருத்துவமனையில் அனுமதித்துள்ளதாகவும் எனவே என்னை அணுகி என்னுடைய மற்றொரு வங்கியான சிட்டி பேங்க் கிரெடிட் கார்டை கொடுக்கும்படி கேட்டார். செப்டம்பர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மேற்கண்ட கிரெடிட் கார்டை பயன்படுத்தி 1 ஆம் எதிரி ரூ.1,40,000/- ஐ செலவு செய்துள்ளார். ஆனால் எனக்கு ரூ.50,000/- மட்டுமே திருப்பி கொடுத்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் வங்கி கணக்கு விவரம் நான் பயன்படுத்தும் சிட்டி வங்கி கணக்கு விவரங்கள் தான் (**26/10/2021 முதல் 25/11/2021 வரை காலத்திற்கான சிட்டி வங்கி பரிவர்த்தனை பு.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

7. இந்நிலையில் கடந்த 05/10/2021 அன்று என்னுடைய அப்பா இறந்து விட்டதால் நான் அங்கிருந்து எனது சொந்த ஊரான பொழிச்சலுக்கு சென்று விட்டேன். அதன் பிறகு எதிரியை அணுகி பணத்தை திருப்பித் தரும்படி பலமுறை கேட்டு வந்தேன். ஆனால் என்னிடம்பெற்ற கிரெடிட் கார்டுகளின் மூலமாக அவர் செலவு செய்த பணத்தை அவர் திருப்பிக் கொடுக்கவே இல்லை. நான் ஜனவரி மாதம் 2022 ஆம் ஆண்டு மீண்டும் எங்கள் அடுக்குமாடி குடியிருப்பு வந்தேன். எதிரி பொங்கல் விடுமுறைக்காக தன்னுடைய சொந்த ஊர் சிதம்பரத்திற்கு சென்றார். ஆனால் அதன்பிறகு மீண்டும் திரும்பி சென்னைக்கு வரவில்லை. இந்நிலையில் 2022 பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்தில் நான் எதிரியை தேடி சிதம்பரத்திற்கு

சென்றேன்.

8. ஆனால் அவருடைய சகோதரர் 2 ஆம் எதிரி ராமசந்திரன் சிதம்பரம் வாண்டியார் சாலையில் என்னை சந்தித்து தனது தம்பி 1 ஆம் எதிரிக்கு உடல்நிலை சரியில்லை என்றும் அவரை தொந்தரவு செய்ய வேண்டாம் என்றும், 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் 1 ஆம் எதிரி கிரெடிட் கார்ட் மூலமாக பெற்ற கடனை அவரே அடைத்து விடுவதாகவும் அதன் பிறகு நான் பெற்ற தனிநபர் கடனுக்கு லட்சம் லட்சமாக பணம் கொடுப்பதாகவும் அதை சேர்த்து வைத்து அந்த தனிநபர் கடனை அடைத்து விடும்படி என்னிடம் உத்திரவாதம் அளித்தார். ஆனால் ஏப்ரல் மாதம் வரையில் 2 ஆம் எதிரி அந்த தொகையை திருப்பி கொடுக்காததால் நான் ஏப்ரல் மாதத்தில் போன் மூலமாக தொடர்பு கொண்டு கேட்டேன். இரு மாதங்கள் அவகாசம் கேட்டார். நான் இரு மாதங்கள் கழித்து அவரை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் அந்த மாதத்திற்கு செலுத்த வேண்டிய கிரடிட் கார்ட் குறைந்தபட்ச கடன் தொகையை மட்டும் தான் கொடுத்தார்.

9. மேலும் என்னுடைய தனிநபர் கடனை 2 ஆம் எதிரி திருப்பி கொடுக்காததாலும் கிரெடிட் கார்ட் தவணைத் தொகையையும் எதிரிகள் கொடுக்காததாலும் நான் ஜூலை 2022 ஆம் ஆண்டு இரண்டாம் வாரத்தில் சோழிங்கநல்லூர் காவல் ஆணையரிடம் புகார் கொடுத்தேன். அந்த புகார் கானாத்தூர்

காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டது ஆனால் எதிரிகள் இருவரும் விசாரணைக்காக வில்லை மாறாக இரண்டாம் எதிரி பெண்ணை தொடர்பு கொண்டு எதுவாக இருந்தாலும் ஒன்றாம் எதிரியிடம் பேசிக் கொள்ளும் படியும் மீறி தனக்கு போன் செய்தால் உன்னை சாகடித்து விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். இந்நிலையில் அந்த புகாரை கேளம்பாக்கம் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அனுப்பி விட்டார்கள். போலீசார் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பினார்கள். எதிரிகள் இருவரும் டிசம்பர் 2022 ஆம் ஆண்டு காவல் நிலையத்தில் விசாரணைக்காக ஆஜரானார்கள்.

10. அந்த விசாரணையில் 1 ஆம் எதிரி தனிநபர் கடனில் ரூ.3,50,000/- வரையில் செலுத்தி விட்டதாகவும் மீதம் செலுத்த வேண்டிய மீதத்தொகை ரூ.3,50,000/- ஐ மாதத் தவணைத் தொகையாக ரூ.15,175/- ஐ செலுத்துவதாகவும் அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் தன் மீது என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்று காவல் நிலையத்தில் எழுதி கொடுத்து விட்டு சென்றார். அதன்படி 2024 பிப்ரவரி மாதம் வரை மாதம் ரூ.15,175/- ஐ செலுத்தினார். ஆனால் அதன் பிறகு எதிரிகள் அந்த தனிநபர் கடனுக்கான தவணையை செலுத்தவில்லை. கிரெடிட் கார்டுகளுக்கு உண்டான நிலுவைத் தொகையையும் திருப்பிக் கொடுக்கவில்லை. எனவே நான் மீண்டும் சோழிங்கநல்லூர் காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மற்றும் ஒப்புகை சீட்டு ஆகியவை

நான் சோழிங்கநல்லூர் காவல் ஆணையர் அலுவலகத்தில் கொடுத்த புகார் மற்றும் அதற்கு வழங்கப்பட்ட ஒப்புகை சீட்டு தான் (**13/02/2024 தேதியிட்ட புகார் மற்றும் ஒப்புகை பு.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

11. எதிரிகளையும் போலீசார் அழைத்து விசாரணை செய்தார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் வழக்கு போட போகிறீர்களா என்று கேட்டார்கள். நான் ஆமாம் என்று சொன்னதால் நீதிமன்றத்தில் இருந்து உத்தரவு வந்தால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக சொன்னார்கள். நான் எதிரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக இந்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். நான் எதிரியின் வீட்டிற்கு சென்றபோது எதிரிகள் இருவரும் அங்கு இல்லை. அவருடைய அப்பா 3 ஆம் எதிரிதான் வீட்டில் இருந்தார். அவரும் தங்கள் மகன்களுக்கு ஆதரவாக பேசினார். எனவே எதிரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் படியும் என்னுடைய பணத்தை இழுப்பீடாக பெற்று தர முடியும் கேட்டுக்கொள்கிறேன்.

S/d– K. Nilavarasan, 23.10.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur